செ.வெ.எண். 14 நாள்: 05.09.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ("கவனம் தேவை") குறும்பட குறுந்தகட்டினை (DVD) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.**

திருநெல்வேலி பூர்ணகலா திரையரங்கில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம், விஜிபிஜி கிளப் மற்றும் நெல்லை மாநகர ரஜினி மன்றம் சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ("கவனம் தேவை") குறும்பட குறுந்தகடு வெளியீட்டு நிகழ்ச்சி இன்று (05.09.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ("கவனம் தேவை") குறும்பட குறுந்தகட்டினை வெளியிட்டார். குறுந்தகட்டினை போக்குவரத்து இணை ஆணையர் திரு.பாலன் மற்றும் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கோ.தனமணி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

இந்தியாவில் சாலை விபத்துகளும், உயிர் இழப்புகளும் அதிகளவில் உள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 1,15,000 நபர்கள் சாலை விபத்துகளில் மரணம் அடைந்ததாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 2016-ம் ஆண்டில் சாலை விபத்துக்களில் 64 நபர்கள் மரணமடைந்துள்ளனர். மேலும், 1,662 நபர்கள் கடுமையாக காயமடைந்துள்ளனர். சாலை விதிகளை முறையாகக் கடைபிடித்து கவனத்துடன் செயல்பட்டால் இவைகளைத் தவிர்க்க முடியும். 18 வயது பூர்த்தியான பின்பு, முறையாக ஓட்டுநர் உரிமம் பெற்று, வாகனங்களை ஓட்ட வேண்டும். கார்களில் செல்பவர்கள் அவசியம் சீட் பெல்ட் அணிய வேண்டும். எதிரில் வருபவர்கள் எப்படிப்பட்ட நிலையில் வருகிறார்கள் என்பதையும் தீர்மானிக்க முடியாது. எனவே, சாலைகளில் மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் சாலை விதிகளையும், விழிப்புணர்வுகளையும் உங்கள் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இரு சக்கர வாகனத்தில் செல்வோர் தலைக்கவசம் அணிய வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துச் சொல்ல வேண்டும். பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சாலை விதிகளையும், சாலை சந்திப்புகளிலுள்ள சிக்னல்-களையும் மதித்து செல்ல வேண்டும். இதன் மூலம் விபத்துக்களை தவிர்க்க முடியும். சிறப்பான வகையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் குறும்படம் தயாரித்தமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல நோக்கத்துடன் இக்குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை அனைவரும் கடைபிடித்து திருநெல்வேலி மாவட்டத்தை விபத்தில்லா மாவட்டமாக மாற்றிட வேண்டும் எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, போக்குவரத்து இணை ஆணையர் திரு.பாலன், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கோ.தனமணி, திருநெல்வேலி வட்டார போக்குவரத்து அலுவலர் திருமதி.சசி, இந்திய செஞ்சிலுவை சங்க திருநெல்வேலி பிரிவு தலைவர் திரு.சார்லஸ் பிரேம்குமார், சிட்டி டிரைவிங் ஸ்கூல் இயக்குநர் திரு.நைனா முகம்மது, பூர்ணகலா திரையரங்கு உரிமையாளர் திரு.பிரபு, குறும்பட இயக்குநர் திரு.சிகாமணி, விஜிபிஜி கிளப் உறுப்பினர் திரு.செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி